உ

ஸ்ரீரஸ்து.

[மேஷம்.]

அசுவதி, பரணி, கார்த்திகையின் முதற்பாதம்
இவைகளில் ஜனித்தவர்களுக்கு

ஆனந்தவருஷத்திய,

நெ-1,

# நவக்கிரகபலன்.

இஃது

திருவாதி, கணிதபண்டிதர்
பிரம்மஸ்ரீ சுந்தரேசுவரச்ரௌதிகள் அவர்கள்
சிஷ்யரும்,
மன்னார்குடி, மகாமகோபாத்தியாயரான
பிரம்ம-ஸ்ரீ ராஜூசாஸ்திரிகளவர்களது
ஸம்ஸ்கிருதபாடசாலை உபாத்தியாயரும்,
ஜகத்குரு,
ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அவர்களால்,
திரிஸ்கந்தபாஸ்கரர் என்னும்,
பெயரளிக்கப்பட்டவருமான
M. N. ராமஸ்வாமிசாஸ்திரிகளால்,
இயற்றப்பட்டு,
மன்னார்குடி பிரம்மஸ்ரீ யஜ்ஞசுவாமிசாஸ்திரிகள் அவர்களால்
நன்கு பரிசோதிக்கப்பட்டு,

கும்பகோணந்தாலூகா அலவந்திபுரம்
கனவான் மகா-௱-ஸ்ரீ அப்பாசாமிஅய்யரவர்களது
பேருதவியைக்கொண்டு,
தஞ்சை ஸ்ரீவித்தியாவிநோதினி அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

1914.

இதன்விலை அணா ஒன்று.] [தபாற்கூலி வேறு]

காப்பிகள் 12000.

## விக்ஞாபனம்.

ज्योतिश्शास्त्रफलं पुराणगणकै रादेश इत्युच्यते
नूनं लग्नबलाश्रितः पुनरसौ तत्स्पष्टखेटाश्रयम् ।
ते गोलाश्रयिणो न्तरेण गणितं गोलोपि न ज्ञायते
तस्माद्योगणितं न वेत्ति स कथं गोलादिकं ज्ञास्यति ॥

ஆஸ்திகர்களே, இகபரங்களில், நமக்கு ஹிதாஹிதங்களைத் தெரிவிப்பதும், சர்வபுருஷார்த்தங்களையும் விளைவிப்பதும், கேவலயுக்தி சாஸ்திரங்களுக்கு எட்டாததுமான மார்க்கங்களை யுணர்த்தும் சாஸ்திரம் வேதம் எனப்படும். வேததில் விளக்கப்பட்டுள்ள கர்மாக்களுக்கேற்ற காலங்களைக் குறிப்பிடுவதாலும், வேதத்தில் சர்வஜனங்களுக்கும் நல்ல நம்பிக்கையையுண்டாக்குவதாலும், ஜ்யோதிஷம் வேதாங்க மெனப்படும். ஷை ஜ்யோதிஷ சாஸ்திரமானது (1) கணிதஸ்கந்தம் (2) ஜாதகஸ்கந்தம், (3) ஸம்ஹிதாஸ்கந்தம் என மூன்றுபிரிவுகளுள்ளது. சுபாசுப பலன்களை, நமக்குச் செவ்வையாய்த்தெரிவிப்பதே ஜ்யோதிஷ சாஸ்திரத்தின் முக்கிய உத்தேசம், அந்தபலன் ஜன்மலக்னத்தின் பலாபலங்களைப் பொறுத்திருக்கிறது. அந்த பலாபலம் ஜனனகாலத்திய கிரகஸ்புடத்தைப்பற்றியது. கிரகஸ்புடமானது பூகோள, ககோள க்ஞானத்தைத் தழுவியது. கோளக்ஞானம் வியக்தம், அவ்வியக்தம் முதலியகணித சாஸ்திரத்தையபேக்ஷித்து நிற்கின்றது. ஆதலின் சரியான ஜன்மகாலத்தை யறிந்து லக்னம் முதலியவைகளைக் கணக்கிட்டு, ஜாதகபலன் சொல்லுவது மூன்றுஸ்கந்தங்களிலும் விசேஷ பாண்டித்திய முடையவர்களுக்கும் அதிக காலவிளம்பத்தின் பேரில் ஒருவாறு சாத்தியமாகும். ஆதலின்

सर्वेषु लग्नेष्वपि सत्सु चन्द्रलग्नं प्रधानं खलु गोचरेषु ।
तस्मात्तदृक्षादपि वर्तमानग्रहेन्द्रचारैः कथयेत्फलानि ॥

என்றபடி, முன்னோர்கள் ஸம்ஹிதாஸ்கந்தத்தில் சந்திர லக்னத்தைக் கொண்டு சற்றேறக்குறைய தற்கால சுபா சுப பலன்களை யறிந்துகொள்ள ஒருமார்க்கம கற்பித்திருக்கின்றனர். அதன்படி அவரவர்களின் நக்ஷத்திரங்களுக்கேற்றவாறு மாசந்தேதி குறிப்பிட்டு, சுபாசுப பலன்களை வருஷந்தோறும் தனித்தனி புத்தகமூலமாய் வெளிப்படுத்த உத்தேசித்து நாளது ஆநந்த வருஷத்திற்கு இச்சிறு புத்தகம், முதலில் பிரசுரிக்கலாயிற்று, இதிற்கண்ட பலன்கள் என் அநுபவத்திலும், பலர் அநுபவத்திலும் பெரும்பாலும் சரியாய்க் காணப்படுவதால் இப்புத்தகத்தைப பலர்கோரிக்கையின் படி வெளியிடத்துணிந்தேன்.

கனவான்கள் இதைப் பரீக்ஷித்துப் பார்த்து ஜ்யோதிஷ சாஸ்திரம் மேன்மேலும் சரியானபடி விருத்தியடையுமாறு எண்ணுல் இன்னும்வெளியிடப்படும் ஜ்யோதிஷ புஸ்தகங்களை ஆதரிப்பார்களென நம்புகிறேன்.

இங்ஙனம்

3—4—14 M. N. இராமஸ்வாமி சாஸ்திரிகள்,

திரிஸ்கந்தபாஸ்கரர்.

## பலன் தெரிந்துகொள்ளும் விதிகள்.

1. இதில் ஒவ்வொரு கிரகமும் கொடுக்கும் பலன்கள் தனித்தனி எழுதப்பட்டிருக்கின்றன. ஒரேகாலத்தில் சில கிரகபலன் சுபமாயும் வேறு சில கிரகபலன் அசுபமாயும் இருக்கக்கூடும். சுப பலனைக்கொடுக்கும் கிரகங்கள் அதிகமாயின் சுபகாலம் என்றும் இல்லாவிடில் அசுபகாலம் என்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

2. ஒரேகாலத்தில் ஒரு கிரகபலன் சுபமும் இன்னொரு கிரகபலன் அசுபமுமாயின் இரண்டும் சம்பவிக்குமேயல்லாது ஒரு கிரகம் மற்றொரு கிரகபலனைத்தடுக்கமாட்டாது. திருஷ்டாந்தமாக ஒரே காலத்தில் ஒருகிரகத்தால் வஸ்திரலாபம் என்றும் மற்றொன்றால் வஸ்திரநாசம் என்றும் பலன் காணப்படில், வெளியிலிருந்து வஸ்திரலாபமும் வீட்டில் உள்ளவஸ்திரத்திற்கு கறையான் முதலியவற்றாலாவது நாசமும் சம்பவிக்கலாம்.

3. மேகங்கள் மழைகாலத்திற்போல் கோடையில் அதிகமாய் வர்ஷிப்பதில்லை. சமுத்திரத்திலும் உழக்கு அதிகஜலத்தை முகவாது அதுபோல கிரகங்களும், காலத்தையும் அந்தஸ்தையும் அநுஸரித்தே பலன்களைக்கொடுக்கும் என்றறியவேண்டும்.

4. தன் அந்தஸ்துக்கு மீறிய யானை, குதிரை, வீடு, முதலிய லாபத்தைப் பலனில் கண்டபடி அடையாதவர்கள் சாஸ்திரத்தைப் பிசகென்று நினைத்தல் கூடாது. வாடகைக்காவது அவையவனுக்குக் கிடைக்கும். அல்லது அவைபோன்ற விளையாட்டுக்கருவிகளாவது வாங்கநேரிடும் அவரவர் ஜாதகத்திலுள்ள கிரகங்களுக்கு சக்தி குறைந்திருந்தால் சுவப்பனத்திலாவது, மனோராஜ்யத்திலாவது பலனைக் கொடுக்குமேயன்றி பலிக்காமற் போகிறதில்லையென்று சாஸ்திரத்தின் கொள்கை.

5. சூரியன். வைகாசி, ஐப்பசி, தை, மாசி, இந்த மாசங்களிலும்,

சந்திரன், விசாகத்தின் கடைசிபாதம், அநுஷம், கேட்டை இந்த நக்ஷத்திரங்களிலும்,

செவ்வாய், சித்திரை 4௨ முதல் வைகாசி 30௨ வரையிலும், ஆடி 19௨ முதல் புரட்டாசி 2௨ வரையிலும், ஐப்பசி 11௨ முதல் பங்குனி 3௨ வரையிலும்,

புதன், வருஷாரம்பத்திலிருந்து வைகாசி 15௨ வரையிலும் ஆனி 7௨ முதல் ஆடி 8௨ வரையிலும், ஆடி 21௨ முதல் புரட்டாசி 4௨ வரையிலும், ஐப்பசி 16௨ முதல் ஐப்பசி 27௨ வரையிலும், மார்கழி 1௨ முதல் தை 11௨ வரையிலும், மாசி 4௨ முதல் மாசி 15௨ வரையிலும்,

குரு, வருஷாரம்பத்திலிருந்து மார்கழி 18உ வரையிலும், மாசிமீ 3உ முதல் மாசி 28உ வரையிலும்,

சுக்ரன், ஆனி 1உ முதல் ஆவணி 15உ வரையிலும், கார்த்திகை 8உ முதல் கார்த்திகை 16உ வரையிலும்,

சனி, வைகாசி 15உ முதல் ஆனி 16உ வரையிலும், எந்த பலன் கொடுக்குமென்று இப்புத்தகத்தில் காணப்படுகிறதோ அது சுப பலமாயின், அதிகம்பலிக்காது. அசுப பலமாயின் அவையப்படியே பலிக்கும்.

6. குறிப்பிட்ட காலங்களுள் சூரியனும், செவ்வாயும் முற்பாகத்திலும், சந்திரனும் சனியும், பிற்பாகத்திலும், குருவும் சுக்ரனும் மத்ய பாகத்திலும், புதன் எல்லா பாகத்திலும், குறிப்பிட்டபலனைக் கொடுக்கும் என்றறியவும்.

7. எல்லாகிரகங்களும் சந்திரனுடன் கூடும்போது தாங்கள் கொடுக்கும் சுபாசுபங்களை விசேஷமாய்க் கொடுப்பார்கள்.

## கிரகங்களுக்கு திருப்திசெய்யும் வழியும் அதன் பலனும்.

சூரியன். சூரிய நமஸ்காரத்தாலும், ஸ்ரீ பரமேசுவரனுடைய ஏகாதச ருத்ராபிஷேகத்தாலும், சிவந்தபுஷ்பம், செஞ்சந்தனம், மகிழம்பூ இவைகளைக்கொண்டு சூரியனை பூஜித்தலாலும், தாம்ரம் சுவர்ணம் இவைகளை பிராம்மணருக்கு தானம் செய்தலாலும் திருப்தியடைவான்.

சந்திரன். உமாதேவியை (பார்வதி) வெண்மையான புஷ்பங்களால் அர்ச்சிக்கச் செய்தலாலும், தயிர், தேன், சர்க்கரை, நெய் இவைகளின் நைவேத்யத்தாலும், வெள்ளி தானத்தாலும், சுவர்ணத்தினல் கன்றும் பசுவும் செய்து பூஜித்து நல்லபாத்திரமறிந்து தானங் கொடுத்தலாலும், திருப்தி யடைவான்.

செவ்வாய். சுப்பிரமணியக் கடவுளை சேவித்தலாலும், சூரியனுக்குச் சொன்ன புஷ்பாதிகள், தானங்கள் இவைகளாலும், பிராமண சமாராதனையாலும், திருப்தி யடைவான்.

புதன். ஸ்ரீவிஷ்ணுதரிசனம், விஷ்ணுபூஜை, விஷ்ணுஸஹஸ்ரநாமஜபம், எள்ளுப்பூக்களால் அர்ச்சனை, ரத்னம், வெள்ளி இவைகளின் தானங்களாலும் திருப்தி யடைவான்.

குரு. மஞ்சள்நிறமான புஷ்பங்களால் பரமசிவத்தின் அர்ச்சனையும், மஞ்சள்நிரமான வஸ்துக்களால் நை;வத்யம், சுவர்ணதானம், பிராம்மணர்களுக்கு திருப்தி செய்வித்தலாலும் திருப்தி யடைவான்.

சுக்ரன். மகாலக்ஷ்மிக்கு அர்ச்சனை செய்வதாலும், வெண்மையான புஷ்பம், சந்தனம், வாசனைப்பொருள்கள். மதந்தரும் வஸ்துக்களால் பூஜை நைவேத்யம் தானம், வெளுப்பான வஸ்திரதானம், இவற்றால் திருப்தியடைவான்.

சனி. கோவிலில் சனிபகவானுக்கு நல்லெண்ணைதீபம் ஏற்றுவித்தல் கருப்புபுஷ்பங்களால் அர்ச்சனை, எள்ளுமுதலிய கருப்பு தான்யங்களின் தானம், சனிக்கிழமையன்று எள்ளன்னத்துடன் சமாராதனை, சனிஸ்துதி செய்தல் முதலியவற்றால் திருப்தியடைவான்.

ராகு. காளி பூஜையாலும், சாஸ்தாவைந்தொழுவதாலும் திருப்தியடைவான்.

கேது. விநாயகர் அல்லது சுப்பிரமணியருடைய சேவையால் திருப்தியடைவான்.

எல்லா கிரகதோஷங்களும், பிராம்மணர்களையும் தேவாலயங்களையும் தொழுவதாலும், கிரகங்களுக்குரிய ஸ்தோத்ர ஜபங்களாலும், தானத்தாலும், இந்திரியங்களை அடக்கியாளுவதாலும், மகான்களுடன் சம்பாஷித்தலாலும் நீங்கிவிடும்.

பிரயோஜனம்-கிரகங்கள் திருப்தி யடைந்தால் பாம்பின் வாயில் கையைக் கொடுத்தாலும், உயரத்திலிருந்து கீழேவிழுந்தாலும், தீமை யேற்படாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, சகல அநிஷ்டங்களும் நீங்கிவிடுமென்பதே யிதன்கருத்து:

☞ கிரகசாந்தியை விஸ்தாரமாய் செய்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் அதற்குரிய சாஸ்திரங்களைக்கொண்டும், தெரிந்தவர்களை விசாரித்தும் அநிஷ்ட நிவர்த்திகளைச் செய்துகொள்ளவேண்டும்.

सूर्यः षट्त्रिदशस्थितस्त्रिदशषट्सप्ताद्यगश्चन्द्रमा
जीवः सप्तनवद्विपञ्चमगतो वक्रार्कजौ षट्त्रिगौ ॥
सौम्यः षट्द्विचतुर्दशाष्टमगतस्सर्वेऽप्युपान्ते शुभाः
शुक्रः सप्तमषट्दशर्क्षसहितः शार्दूलवत्त्रासकृत् ॥

சூரியன் கொடுக்கும் பலன்.

சித்ரைமீ த்தில் வழிப்பயணம், பொருட்செலவு, ஆயாஸம், உதரரோகம், ஸ்தானநாசம்.

வைகாசிமீ த்தில் வீண்செலவு, சுகக்குறைவு, வஞ்சிக்கப்படுதல் கண்ணுபாதி.

ஆனிமீ த்தில் ஸ்தானப்ராப்தி, ஆரோக்யம், சந்தோஷம், சத்ருநாசம் போன்ற சுபங்கள்.

ஆடிமீ த்தில் ரோகசம்பவம், போகமின்மை, இரத்தம்காணல், ஜ்வரம், விவாதம்.

ஆவணிமீ த்தில் ரோகம், சத்துரு, அரசன், புத்திரன், இவர்களால் பீடை.

புரட்டாசிமீ த்தில் சோகமின்மை, ரோகநிவர்த்தி, சத்துரு நிவர்த்தி.

ஐப்பசிமீ த்தில் வழிப்பயணம், வயிற்றுநோய், ஏழ்மை, இரத்தக்காயம், ஜ்வரம், அஜீர்ணம், சோர்வு, விஷம்.

கார்த்திகைமீ த்தில் ரோகம், பயம், பெண்சாதியும் பிரதிகூலமாதல், ஆகிய சுகமின்மை.

மார்கழிமீ த்தில் ஆபத்து, பந்துத்துவேஷம், பரிதாபநிலைமை வியாதி, பணத்திற்கும், தொழிலுக்கு மிடஞ்சல்கள்.

தைமீ த்தில் பெருத்தஜயம், படிப்படியாய் காரியம்கை கூடுதல், தங்கம், வெள்ளி. வஸ்திரம், நாற்கால்பிராணிகள், வேலையாட்கள், ஸ்திரீ, இவைகளின் லாபம்.

மாசிமீ த்தில் ஜயம், ஸ்தானலாபம், சன்மானம், ஐசுவரியம் ரோகநாசம், ஸந்தோஷம், புகழ்.

பங்குனிமீ த்தில் நன்னடத்தையுள்ளவனுகில் காரியசித்தி, துர்நடத்தையுள்ளவனுகில் கார்யத்தாழ்ச்சி, என்றறியவும்.

## சந்திரன் கொடுக்கும் பலன்.

| காலங்கள். | பலன்கள். |
| --- | --- |
| அசுவதி. பரணி, கார்த்திகையின் 1-ம்பாதம் இந்த நக்ஷத்திரங்களில். | சுகபோஜனம், சுகந்தம், புஷ்பம், ஸ்திரீலாபம், மித்திரலாபம், நல்லபடுக்கை நல்ல உடுப்புகள். |
| கார்த்திகையின் பின் மூன்று பாதங்கள், ரோகிணி, மிருகசீர்ஷம்,முற்பாதி இந்த நக்ஷத்திரங்கங்களில். | பொருட்சேதம், கவுரவக்குறைவு, விவாதம், விக்கினம் போன்றவை. |
| மிருகசீர்ஷத்தின் பிற்பாதி திருவாதிரை, புனர்பூசம், முன் மூன்று பாதங்கள், இந்த நக்ஷத்திரங்களில் | வஸ்திரம், ஸ்திரீ, தனம், நல்லபோஜனம், புகழ், மித்திரன், சௌக்கியம், இவைகளின் லாபம், விசேஷ ஜயம் முதலிய சுபபலன்கள். |
| புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம், இந்த நக்ஷத்திரங்களில் | எல்லாரிடத்திலும் அவநம்புதல், பந்து பீடை, பொருட்சேதம், முதலிய துன்பங்கள். |
| மகம், பூரம், உத்திரம் முதற்பாதம் இந்த நக்ஷத்திரங்களில் | ஏழ்மை, அஜீர்ணவியாதி, மனக்கலக்கம், மாற்கத்தில் இடஞ்சல் |
| உத்திரம் 2, 3, 4-ம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரையின் முற்பாதி இந்த நக்ஷத்திரங்களில் | விசேஷமாய்ப் பொருள்கிடைத்தல் சத்துருநிவிருத்தி, ரோகநிவிருத்தி, காரியசித்தி, சுகம், மித்திரன் வரவு ஆகிய சுபங்கள். |
| சித்திரையின் பிற்பாதி, சுவாதி விசாகத்தின் முன் மூன்று பாதங்கள் இந்த நக்ஷத்திரங்களில் | ஸ்திரீயினாலும், அடிமைகளாலும், பந்துக்களாலும், நன்மை, திவ்வியபோஜனம்,நல்லபடுக்கை, சுவர்ணலாபம், வஸ்திரலாபம், வாகனம்,கவுரவம்,முதலிய சுபபலன்கள். |
| விசாகத்தின்கடைசிபாதம், அநுஷம், கேட்டை, இந்த நக்ஷத்திரங்களில் | பசி, வியாதி, சிந்தை, கலகம், தனநாசம், விபத்து, உபத்திரவம் முதலான கெட்ட பலன்கள், |

| | |
|---|---|
| மூலம், பூராடம், உத்திராடம் முதற்பாதம், இந்த நக்ஷத்திரங்களில் | பந்தனம், சஞ்சலசித்தம், கவலை, உதரரோகம், சிரமம், பொருட்சிலவு, சத்துருஹிம்சை. |
| உத்ராடம், பின் மூன்றுபாதங்கள், திருவோணம், அவிட்டம் முற்பாதி இந்த நக்ஷத்திரங்களில் | கண்யம், சந்தோஷம், கார்யசித்தி, நல்ல செல்வாக்கும் உண்டாம் |
| அவிட்டம் பிற்பாதி, சதயம், பூரட்டாதி முன் மூன்று பாதங்கள் இந்த நக்ஷத்திரங்களில் | பலவிதமான தனலாபம், மித்திரலாபம், மிகுந்த சந்தோஷம், கல்லியாணம், போஜனசவுக்கியம், சுகசயனம் முதலிய சுபபலன்கள். |
| பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி இந்த நக்ஷத்திரங்களில் | ஏழ்மை, சோம்பல், பொருமை, தனக்குறைவு இவைகளுண்டாம் |

## செவ்வாய் கொடுக்கும் பலன்.

| | |
|---|---|
| சித்திரைமீ 4உ முதல் வைகாசிமீ 30உ வரை | ஜ்வரம், வயிற்றுநோய், இரத்தக்காயம், அற்பமனிதன்சேர்க்கையால் அசவுக்யம், எந்தக்காரியத்திலும் உத்ஸாகமின்மை. |
| வைகாசிமீ 31உ முதல் ஆடிமீ 18உ வரை | சத்துரு, ரோகம், கோபம், பயம், இவையுண்டாம், புத்திரனுல்மனசுக்குத் துன்பம், சரீரகாந்தி குன்றும். |
| ஆடிமீ 19உ முதல் புரட்டாசிமீ 2உ வரை | சத்துருவில்லை, மனதில் பயமேயுண்டாகாது, கலகம் ஏற்படாது, பொன், செம்பு, பவழம் இவை கிடைக்கும், பிறர் உதவியை வேண்டான். ஆரோக்கியமும் சந்தோஷமும் மேலிடும், கியாதியுண்டாகும். |
| புரட்டாசிமீ 3உ முதல் ஐப்பசிமீ 15உ வரை | பெண்சாதியுடன் கலகம், கண் உபாதியும்சம்பவிக்கும், உதரரோகமுண்டாம், தனமும், சினேகமும் குறையும். |

| | |
|---|---|
| ஐப்பசிமீ 16வ முதல் கார்த்திகை 26வ வரை | இரத்தக்காயம், பொருட் சிலவு, மானக்குறைவு முண்டாகும், விஷம், சத்துரு, ஆயுதங்களால் ஹிம்ஸையுண்டாகக் கூடும், ஏழ்மையுமுண்டாம். |
| கார்த்திகைமீ 27வ முதல் தைமீ 7வ வரை | அவமதிப்பு, உண்டாகும் பொருட்சேதமுண்டு, தாதுநஷ்டம், பலக்குறைவும் எல்லாக் காரியங்களிலும் தாமஸமும் ஏற்படும் அலைச்சலுமுண்டாகும். |
| தைமீ 8வ முதல் மாசிமீ 16வ வரை | சுபாசுபங்கள் சமமாயிருக்கும் என்றாலும் முற்பாதியில் வியாதி, சத்துரு, ஆயுதம், சோரன், விரணம், இவையுண்டாம், பிற்பாதியில் இஷ்டமெல்லாம்சித்திக்கும். |
| மாசிமீ 17வ முதல் பங்குனிமீ 24வ வரை | காரியசித்தி, வியவஹாரத்தில ஜயம், நாநாவிதமாய் தனம்சேரும் மேன்மையான பதவியிலிருந்து விசேஷ சுகமடைவான். |
| பங்குனிமீ 25வ முதல் ஆநந்த-ஷ் முடிய | அனேகவிதச்சிலவும், கெடுதி, தாபமும் ஸ்திரீ கோபமும், பித்த நோயுமுண்டாம். |

## புதன் கோடேக்கும் பலன்.

| | |
|---|---|
| ஆனந்த வருஷாரம்பத்திலிருந்து சித்திரைமீ 18வ வரை. | அவமதிப்பும் சத்துருஹிம்ஸையும், வியாதியும், எடுத்தகாரியங்களில் அதிகசிரமமும் ஏற்படும் ஸ்திரீ சுகமும் குறையும். |
| சித்திரைமீ 19வ முதல் வைகாசிமீ 2வ வரை | கெட்டவார்த்தைகள், கோள்வார்த்தைகள், திருப்தியற்ற காரியங்கள், பாகம் பிரித்தல், இவைகளால்தீமையும், கட்டுப்படுதலும் கலகமும், பொருட்சேதமும், உண்டாம் ஸவுபாக்கியம், வித்தை, புத்தி, மானம், இவை கெடும். |
| வைகாசிமீ 3வ முதல் வைகாசிமீ 16வ வரை | தோன்றியவாறு நடப்பான். அபவாதம், சோகம், இளப்பம், இவையுண்டாம். |

| | |
|---|---|
| வைகாசிமீ 17௳ முதல் ஆனிமீ 6௳ வரை | மனசுக்கிசைந்த மித்திரன் கிடைப்பான். தன் கெட்டசெயல்கள் வெளிப்படுமோவென்று அரசனிடமும் பகைவரிடமும் அச்சம் உண்டாகும். |
| ஆனிமீ 7௳ முதல் ஆடிமீ 2௳ வரை | ஸ்வஜனவிருத்தி, குடும்பவிருத்தி, பொருள்வரவும் ஏற்படும், மதிப்பும், சந்தோஷமும் ஸ்திரீலாபமும் உண்டாகும். |
| ஆடிமீ 3௳ முதல் ஆடிமீ 20௳ வரை | மனசுக்கிசைந்த மித்திரன் கிடைப்பான். தன் கெட்டசெயல்கள் வெளிப்படுமோ வென்று அரசனிடமும் பகைவாரிடமும் அச்சம் உண்டாகும். |
| ஆடிமீ 21௳ முதல் ஆவணிமீ 8௳ வரை | ஸ்வஜன விருத்தி, குடும்ப விருத்தி பொருள்வரவும் ஏற்படும். மதிப்பும் சந்தோஷமும் ஸ்திரீலாபமும் உண்டாகும். |
| ஆவணிமீ 9௳ முதல் ஷை மீ 23௳ வரை | புத்திரனோடும், பத்தினியோடும், கலகமுண்டாம். ஸ்திரீசுகம் இராது. |
| ஆவணிமீ 24௳ முதல் புரட்டாசிமீ 11௳ வரை | ஸவுபாக்கியம், மேன்மை, உத்ஸாஹம், சர்வகாரிய ஜயம், லாபம், மனசுக்குத் திருப்தி இவையுண்டாம். |
| புரட்டாசிமீ 12௳ முதல் ஐப்பசிமீ 8௳ வரை | சரீரமேனி குறையும், கலகம் அதிகம் உண்டாகும். |
| ஐப்பசிமீ 9௳ முதல் ஷை மீ 13௳ வரை | காரியஜயம், புத்திரலாபம், தனலாபம், வஸ்திரலாபம், சாமர்த்தியம், புத்திதீக்ஷண்யம், ஸௌக்கியம் இவையுண்டாம். |
| ஐப்பசிமீ 14௳ முதல் கார்த்திகைமீ 17௳ வரை | சரீரமேனி குறையும், கலகம் அதிகம் உண்டாகும். |
| கார்த்திகைமீ 18௳ முதல் மார்கழிமீ 8௳ வரை | காரியஜயம், புத்திரலாபம், தனலாபம், வஸ்திரலாபம், சாமர்த்தியம், புத்திதீக்ஷண்யம், ஸௌக்கியம், இவையுண்டாம். |
| மார்கழிமீ 9௳ முதல் ஷை மீ 27௳ வரை | தோல்வி, அபவாதம், விக்கினம், அலைச்சல் இவையுண்டாம். |

| | |
|---|---|
| மார்கழிமீ 28உ முதல் தைமீ 14உ வரை | சர்வகாரியங்களும் நிறைவேறும், சத்துரு ஜயமுண்டாம், தனலாபம் அதிகம், நல்லபடுக்கையும் ஸ்திரீசுகமு முண்டாம், வேட்டகம், செல்வான், நல்ல கதைகள் கேட்பான். |
| தைமீ 15உ முதல் பங்குனிமீ 23உ வரை | தனம், புத்திரன், சுகம், ஸ்திரீ, தோழன், வாஹனம் இவைகளின் லாபமும், மனசுக்குச் சந்தோஷமுமுண்டாகும், இனிமையாய்ப் பேசுவான். |
| பங்குனிமீ 24உ முதல் வருஷம் முடிய. | அவமதிப்பும், சத்ரு ஹிம்ஸையும், வியாதியும் எடுத்த காரியங்களில் அதிக சிரமமும் ஏற்படும் ஸ்திரீ சுகமும் குறையும், |

## குரு கோடேக்கும் பலன்.

| | |
|---|---|
| ஆனந்த-வ ஆரம்பத்திலிருந்து மார்கழிமீ 18உ வரை. | ஸ்தானம், ஆரோக்யம், தனம் இவை கெடும். கபரோகமும், கண்ணெரிச்சலும் புத்ரபீடையும் சம்பவிக்கும். |
| மார்கழிமீ 19உ முதல் ஆனந்த-வ முடிய | பூமி, வீடு, சுவர்ணம், புத்திரன், ஸ்திரீ, தான்யம், வஸ்திரம், வாகனம், இவைகளின் லாபமுண்டாகும் இஷ்டமெல்லாம் சித்திக்கும். |

## சுக்கிரன் கோடேக்கும் பலன்.

| | |
|---|---|
| வருஷாரம்பத்திலிருந்து சித்திரைமீ 12உ வரை | உயர்ந்த படுக்கை, நல்ல அலங்காரம் சிலாக்கியமான உடுப்புகள், நல்ல வாசனைகள், புஷ்பங்கள், ஸங்கீதம் வாத்தியம், நடனம், முதலிய காம போகங்களால் எப்போதும் சந்தோஷமேமேலிடும், நல்ல இருப்பிடம், உயர்ந்த ஆஸனம், சுகபோகங்கள், முதலிய விசேஷசுபபலன்கள் உண்டாகும். |

| | |
|---|---|
| சித்திரைமீ 13வ முதல் வைகாசிமீ 6வ வரை | புத்திரோத்ஸவம், பொருள் வரவு, தான்யலாபம் உண்டாகும். அரசனும் வணங்குவான். குடும்பத்திற்கு சவுகரியங்கள் ஏற்படும். புஷ்பங்களாலும் இரத்தினங்களாலும் அலங்கரித்துக் கொள்வன். காமசுகம் மேலிடும். |
| வைகாசிமீ 7வ முதல் ஷெ மீ 31வ வரை | நல்ல செல்வாக்கு, பொருள் வரவு, மரியாதை, நல்ல இடம், விசேஷ சம்பத்து, சத்துருநாசம், வஸ்திரலாபம் முதலிய சுபபலன்கள் ஏற்படும். |
| ஆனிமீ 1வ முதல் ஷெ மீ 25வ வரை | மித்ரகோஷ்டியுண்டாகும் மிகுந்த சக்திவாய்க்கும், சுகபோஜனம், வஸ்திரலாபம் நல்ல வாஸனைகள் இவை உண்டாகும். |
| ஆனிமீ 26வ முதல் ஆடிமீ 19வ வரை | ஆசாரியன் முதலிய பெரியோர்கள் திருப்தியடைவார்கள். பந்து ஜனங்கள் வந்து சேர்வார்கள். புத்திரலாபம், தனலாபம் மித்திரசகாயம் ஏற்படும். சத்துருவே இரான். |
| ஆடிமீ 20வ முதல் ஆவணிமீ 15வ வரை | அவமதிப்பும் ரோகமும், விவாதமும், தாபமும் உண்டாகும். |
| ஆவணிமீ 16வ முதல் புரட்டாசிமீ 15வ வரை | ஸ்திரீ நிமித்தம் மனக்கிலேசமுண்டாம். கெட்டமித்திரன்சேர்வான். அலைச்சலும் தாகமுமுண்டாகும். |
| புரட்டாசிமீ 16வ முதல் தைமீ 16வ வரை | நல்லவீடு, பிரியமானவர்களின் சேர்க்கை, பரிஜனங்கள், லக்ஷ்மிக்கொப்பான ஸ்திரீயின் சேர்க்கை முதலிய நல்ல பலன்களுண்டாகும். |
| தைமீ 17வ முதல் மாசிமீ 16வ வரை | தரும காரியங்கள் நடைபெறும், சினேகிதர்களும், பெரியோர்களும், மகிழ்வார்கள், நற்குணங்களும்புகழுமுண்டாம். தனலாபமும் ஸ்திரீ சுகமும் ஏற்படும். |
| மாசிமீ 17வ முதல் பங்குனிமீ 12வ வரை | கலகமும், அவமானமும், நேரிடும். பந்துப்பிரீதி ஏற்படாது. |

| | |
|---|---|
| பங்குனிமீ 13உ முதல் ஆநந்த-வரு முடிய | மித்திரலாபம், தனலாபம், நல்லபோஜனம், வாசனைத்திரவியங்கள், வஸ்திரலாபம், இவையுண்டாகும். |

சனி கோடேக்கும் பலன்.

| | |
|---|---|
| வருஷாரம்பத்திலிருந்து ஆனிமீ 6உ வரை | சரீரத்தின் சவுக்கியமும், அழகும், குறையும். கர்வம், பலம் இராது. இதரக் கிரகங்கள் நல்ல ஸ்தானங்களிலிருந்து தனத்தைக் கொடுத்தாலும் அதையுங் குறைத்து, உடனே சிலவழிக்கச்செய்யும் |
| ஆனிமீ 7உ முதல் வருஷம் முடிய | நிறைந்தபொருள் சேரும். வேலையாட்கள், பரிவாரங்கள், யானை, குதிரை, ஒட்டகம், எருமை, கழுதை, முதலியவை வந்து பொருந்தும். வீட்டையும் ஐசுவர்யத்தையுமடைவான். ரோகநாசமுண்டாம். இந்த ஜாதகன் பயந்த சுபாவமுள்ளவனாயினும்சத்துருவையு மடக்கியாளத்தக்க சக்தியுள்ளவனாவான். |

இராகு கோடேக்கும் பலன்.

| | |
|---|---|
| வருஷ முழுமையும் | புகழுண்டாம். பிறர்மனைசேரும். அன்னியர்தனம்சிக்கும் அடிமையுண்டாம். காரியங்கள் சித்திபெறும். தீக்ஷ்ணசுபாவமுள்ளவனாவான். |

கேது கோடேக்கும் பலன்.

| | |
|---|---|
| வருஷ முழுமையும் | சத்துரு, ரோகம், கோபம், பயம், இவையுண்டாம். புத்திரனால் மனசுக்குத்துன்பம். சரீரகாந்தி குன்றும். |

தஞ்சாவூர் தந்வந்தரி விலாஸ வைத்தியசாலையில்
ஸம்ஸ்கிருத வைத்திய சாஸ்திர முறைப்படி
R. D. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளால் செய்யப்பட்ட
ஔஷதங்கள்.

# ஜீவஸஞ்சீவநம்.

ஜீவஸஂஜீவநஂ நாம ரஸாயநமிதஂ ந்ருணாஂ |
ரக்தவ்ருத்திஂ வஹ்நிதீப்திஂ பலாரோக்யஂ கரோதி ச ||

இந்த ரஸாயநம், இரத்தம் கெட்டு வெளிர்த்த சரீரத்தில் சுத்தமான இரத்தப் பெருக்கை சீக்கிரத்தில் உண்டாக்கும். இரத்தாசயம் என்ற ஹிருதயத்திற்குப் பலத்தைக்கொடுக்கும். சரீரத்திற்கு இயற்கையான நிறத்தைத்தரும். கை கால்முதலிய அவயவங்களுக்கு வரவர பலத்தக்கொடுக்கும். ஜாடராக்கினியை வலுக்கச்செய்து கிரமமான ஆகாரத்தை உட்கொள்ளச்செய்யும். ஆமாசயத்திற்கு உசிதமான ஜீர்ணசக்தியைக்கொடுத்து அன்னஸாரத்தை முற்றிலும் இரத்தமாக்கும். தளர்ந்துபோன இரத்த நாடிகளைப்பூரித்து இரத்த ஓட்டத்தைப் பரவச் செய்யும். இரத்தவிருத்தியின் குறிகளை நகங்களிலும் கண்களிலும் காண்பிக்கும். இருபது தினங்களில் இரத்தம் விருத்தியடைந்திருப்பது அனுபவத்தில் நன்ருய் தெரியும். இந்த ரஸாயநம் எத்தனை நாளிருந்தாலும் கெடாது.

22-நாள் சாப்பிடக்கூடிய ரஸாயநம் டப்பி 1க்கு ரூ 1-8-0
வி. பி. சார்ஜ் தனி

(மதநமோதகம் என்னும்)

# தாதுபுஷ்டி லேகியம்.

நரோ வாஜீகராந் யோகாந் ஸம்யக் [illegible] நிராமய: |
ஸவ்ருத்தஂ [illegible] ||

இது நல்ல வீரிய புஷ்டியைக் கொடுக்கும்.

வீரியமானது, பதினாறுவது வயதில் உற்பத்தியாகி எழுபதாவது வயதிற்குப் பிறகு குறைவடைகிறது. 16-வது வயது முதல் எழுபது வயதுக்குள் மூப்பு, கவலை, வியாதி, அதிக வேலை, மிதமிஞ்சினபோகம் பயம், க்ஷயம் முதலியவைகளால் வீரியம் க்ஷயமடைகின்றது. வீரியக்ஷயத்தினல் ஏற்படக்கூடிய வியாதிகளுக்

கோ கணக்கில்லை. வீரியக்ஷயமடைந்தவன் வெகு அற்பசுகமனுபவிக்கவும் சக்தியற்றவனுகிறான். ஸந்ததியுமுண்டாகாது.

ஆதலால் க்ஷயமடைந்த வீரியத்தை அடிக்கடி பூர்த்திசெய்துகொள்வதற்காகவே ஒவ்வொருவனும் 16-வயது முதல் 70 வயது வரையில் தாது புஷ்டி மருந்துகளை அவசியம் சாப்பிட வேண்டுமென்று முன் காட்டிய ஆயுர்வேதவசநம் கட்டாயப்படுத்துகின்றது.

முன்கூறிய வீரியக்ஷயம் அல்லது அதற்குக் கெடுதி உண்டாகாமலிருக்கவேண்டுமானல் நம்மால் செய்யப்பட்ட மதநமோகத்தைப்போல் சிறந்த மருந்து கிடைப்பதரிது.

இதன் விலை டப்பி 1-க்கு ரூ. 1—8—0

வி. பி சார்ஜ் தனி.

---

ஶூலபாடநம்

## சூலபாடநம்.

இனி ஏது வயிற்றுவலி?

இந்த லவணமானது, காலநியமமில்லாமலும், ஆகாரம் ஜீரணமாகும்போதும் உண்டாகிற கொடிய வயற்றுவலியை நீக்கிவிடும். ஆகாரத்தைப் புளித்துப்போகமல் ஜீரணமாக்கி சரீரத்துக்குப் பலத்தைக்கொடுத்து மனிதனைக்கொடிய வயற்றுவலி ரோகத்திலிருந்து பத்து தினங்களுக்குள் காப்பாற்றும். புளித்த ஏப்பம், பொருமல், மலபந்தம், மலச்சிக்கல், வாந்தி இவைகள் இம்மருந்தினல் விரைவில் குறைந்துவிடும். இதை சாப்பிட்டுச் சுகமடைந்தவர்கள் சோடாவைத் தேடமாட்டார்கள்.

இரண்டு வாரத்திற்கு உபயோகிக்கக்கூடிய மருந்தின் கிரயம். ரூ 1-8-0.

வி. பி. சார்ஜ் தனி.

---

## உத்தமாரணீதைலம்.

இதைப்போல் மலாசயத்தைச் சுத்தப்படுத்து வதிலும் மலச்சிக்கலை நீக்கித் தீனிப்பை மலப்பைகளைத் தத்தம் வேலைகளை சரியாய் நடக்கச் செய்வதிலும் வேறு சிறந்த மருந்தில்லை. யாவரும் இம்மருந்தைப் பயமில்லாமல் பேதிக்கு வாங்கிக்கொள்ளலாம். மற்ற எண்ணெய்களைப்போல் அதிக அளவு சாப்பிடவேண்டியதில்லை. இதன் குணத்தைக் கண்டவர்கள் வேறு விரேசன மருந்துகளை வேண்டார். குழந்தைகளுக்குக் குறைந்த அளவில்

மலத்தைக் கழிப்பதற்கும் குடலைப்பற்றிய கட்டி முதலியவை களைக் கரைப்பதற்கும் இது உபயோகப்படும். இதை அடிக்கடி உபயோகப்படுத்துவதனல் வாதரோகம், சூலக்கட்டு, வயிற்றுக் கட்டி, மஹோதரம், வீக்கம், சுவாஸகாசம், அண்டவாதம், நெரி கட்டு ஜ்வரம், யானைக்கால் இவைபோன்ற மலாசய சுத்தியால் விலக்கக் கூடிய வியாதிகள் தீரும்.

இதன்விலை ஒரு அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ 1—0—0,
வி. பி. சார்ஜ் தனி.

படபாநல சூர்ணம்:—இது எவ்விதமான நீடித்த வயிற்றுப் போக்கையும் தடுத்து பசியை விருத்திசெய்து ஆகாரத்தை உட் கொள்ளச் செய்யும். வாந்தி, அரோசகம், அன்னத்துவேஷம், வயிற்றில் இரைச்சல், பொருமல், அஜீர்ணம், இவைகளை விலக் கும். ஒருவாரத்துக்குள் இதன்குணம் நன்றாய் தெரியும்.

32 மாத்திரையுள்பட டப்பி 1-க்கு ரூபா 1—8—0
வி. பி. சார்ஜ் தனி.

ஜீரகாதி குளிகை:—இது அக்கினியை விருத்திசெய்து நல்ல பசியைக்கொடுத்து ஆகாரத்தை ஜரிக்கச்செய்யும். பசியின்மை, பொருமல், இரைச்சல், முதலிய அஜீர்ணத்தினலுண்டான குட லிலுள்ள கெடுதிகளை விலக்கும். யாரும் விரும்பத்தக்கது.

50-மாத்திரைகளின் விலை ரூபா 0 12 0
வி. பி. சார்ஜ் தனி.

கிலோன்மூலஙீ:—இம்மாத்திரை மூலரோகத்திற்கு கை கண்ட மருந்து. மூலத்திலிருந்து இரத்தம் விழுவதை தடுத்து மூலமுளைகளையும் அங்குள்ள அரிப்பு, எரிச்சல், கடுப்பு முதலிய வேதனைகளையும் குறைக்கும் மலச்சிக்கலை விலக்கும்.

32, மாத்திரைகளின் கிரயம் ரூபா 0 8 0
வி. பி. சார்ஜ் தனி.

ஹிமகராஞ்சநம்:—இந்த அஞ்சநமானது, கண்களில் சிவப்பு, எரிச்சல், மறைப்பு, சதைவளர்ச்சி, கூச்சம், நீர்வடிதல், வேக்காடு கொடிபடர்தல், அரிப்பு, தடித்தல், கண்வலி, முதலிய நேத்திர ரோகங்களை நீக்கும். சிறுவர் முதல் கிழவர்வரை உபயோகிக்க லாம். தாமிரசலாகையுடன் பாடில் 1-க்கு ரூபா 1 0 0
வி. பி. சார்ஜ் தனி.

## பாலபேஷஜம்.

### குழந்தைகளின் வியாதிகளை விலக்கும்.

கோரோசனைமாத்திரை—ஜ்வரம், இருமல், ஜலதோஷம், கணச்சூடு, முதலியவைகளை நீக்கும்.

50-மாத்திரைகளின் விலை ரூ 0 12 0

வி. பி. சார்ஜ் தனி.

குங்குமப்பூ மாத்திரை—இது மலத்தைக் கழித்து குடலைச் சுத்தப்படுத்தி மாந்தம், ஜ்வரம், ஜன்னி, நெஞ்சுக்கட்டு, மலச் சிக்கல் பொருமல் முதலியவியாதிகளை விலக்கும்.

50-மாத்திரைகளின் விலை ரூ 0 12 0

வி. பி. சார்ஜ் தனி.

பாலஸஞ்சீவநீ—இந்த மாத்திரையைக் குழந்தைகளுக்கு பேதிக்கு கொடுக்க சிலாக்கியமானது. ஒருதுர்குணமுமிராது.

50-மாத்திரை ரூ 0 8 0

வி. பி. சார்ஜ் தனி.

ஸமயஸஞ்சீவநீ—குழந்தைகளுக்கு மாந்தத்தினாலாவது வேறு எந்தகாரணத்தினாலாவது உண்டாகக் கூடிய எவ்விதமான இசிவுகளையும் 20-நிமிஷத்தில் ஒரேதடவையில் தப்பாமல் நிறுத்திவிடும், மாந்தம் அஜீர்ணம் விலகும்.

50 மாத்திரையின் விலை ரூ 0 12 0

வி. பி. சார்ஜ் தனி.

☞ இன்னும் நம்முடைய வைத்தியசாலையில் அநேகம் மருந்துகள் த[illegible]ாகவிருப்பதால் வேண்டியவர்கள் நமக்கெழுதி காட்லாக்கையும் மருந்துகளையும் பெற்றுக்கொள்ளலாம். கடிதம் எழுதுபவர்கள் இந்தப்புஸ்தக மூலமாய் நம்முடைய மருந்துகளைத் தெரிந்து கொண்டிருந்தால் அதையும் கண்டு எழுதவும்.

R. D. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள்,

தந்வந்தரி விலாச வைத்தியசாலை

தஞ்சாவூர்.